தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். ஏ. சோமசுந்தரம் Ph.D.,
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 14-2-2019

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக துணைவேந்தருக்கு**
**பெங்களூரு தோட்டக்கலை ஊக்குவிப்பு சங்கத்தின் மாண்பமை ஆராய்ச்சியாளர் விருது…**

தமிழ்நாடு வேளாண்மைப்பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் முனைவர் நீ. குமார் அவர்களுக்கு தோட்டக்கலை ஊக்குவிப்பு சங்கத்தின் உயரிய விருதான சங்கத்தின் மாண்பமை ஆராய்ச்சியாளர் விருது அச் சங்கத்தின் நிறுவன தின விழாவில் பிப்ரவரி திங்கள் 8 ஆம் நாள் 2019 வழங்கப்பட்டது.

இவ்விருது பேராசிரியர் முனைவர் நீ. குமார் அவர்களின் தோட்டக்கலைத்துறையில் ஆற்றிய சிறப்பான பங்களிப்புக்கு வழங்கப்பட்டது. இத்துறையில் சுமார் 40 ஆண்டுகளுக்கு மேலாக சிறப்பாக பணியாற்றி இருபதிற்கும் மேற்பட்ட ஆராய்ச்சி திட்டங்களுக்கு தலைமை தாங்கியுள்ளார். மேலும், மேம்படுத்தப்பட்ட பயிர் இரகங்களையும் பலவகையான தோட்டக்கலை தொழில்நுட்பங்களையும் கண்டுபிடித்து உழவர் பெருமக்களுக்காக அறிமுகப்படுத்தியுள்ளார். துணைவேந்தரின் மற்றுமொரு திட்டமான சொட்டு நீர் பாசனத்திட்ட ஆராய்ச்சி முடிவுகள் தமிழக அரசின் துல்லிய பண்ணைத்திட்டத்தினை விவசாய பெருமக்களுக்கு சிறப்பாக வழங்கிட உறுதுணையாக இருந்தது.

மேலும், இவர் எட்டுக்கும் மேற்பட்ட நூல்களையும், 52 உலகலாவிய, 83 ஆராய்ச்சி கட்டுரைகளை இந்திய அளவிலான ஆராய்ச்சி இதழ்கள் எழுதியுள்ளார். மேலும், உழவர் விவசாய பெருமக்களுக்கு பயனளிக்கும் வகையில் 42 உயர் ஆராய்ச்சிக் கட்டுரைகள், மாணவர்களுக்கான தொழில்நுட்ப கையேடுகள் எட்டினையும் மற்றும் வேளாண் விரிவாக்க கையேடுகளினையும் தயாரித்துள்ளார். இவருடைய நூல்களை மாணவர்களும் போட்டித் தேர்வாளர்களும் அதிகமாக பயன்படுத்தி தேர்வுகளில் வெற்றி பெற்று வருகின்றார்கள். மேலும், மாணவர்களுக்கு மிகச்சிறந்த ஆசிரியராக பணியாற்றி 21 முதுகலை மாணவர்களையும், 13 முனைவர் பட்டப்படிப்பு மாணவர்களையும் வழிநடத்தி உள்ளார்.

இவர் மூன்று உலக அளவிலாவிய கருத்தரங்களையும், ஏழு தேசிய கருத்தரங்குகளையும் சிறப்பாக நடத்தியுள்ளார். இவர் ஆராய்ச்சி சம்பந்தமாக பதினைந்திற்கும் மேற்பட்ட நாடுகளுக்கு சென்று பல்வேறு பல்கலைக்கழகங்களில் புரிந்துணர்வு ஒப்பந்திற்கு வழிவகுத்துள்ளார்

இவ்வாறாக தோட்டக்கலைத்துறையில் மிகச்சிறந்த பங்காற்றியதற்காக தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக துணைவேந்தருக்கு பெங்களூரு தோட்டக்கலை ஊக்குவிப்பு சங்கம் மாண்பமை ஆராய்ச்சியாளர் விருது வழங்கி கவுரவித்துள்ளது.

மக்கள் தொடர்பு அலுவலர்